# கெரிஞ்சியில் கால்வாய் சரிவு

# உடனடியாக நடவடிக்கை முன்னெடுப்பு

## அமைச்சர் உறுதி



கோலாலம்பூர், ஆக. 29-
கம்போங் கெரிஞ்சி, ஜாலான் பந்தாய் பெர்மாயில் கால்வாய் சரிந்து பெரிய குழி ஏற்பட்ட விவகாரத்தில் சம்பந்தப்பட்ட அமைப்புகளுடன் இணைந்து கோலாலம்பூர் மாநகர் மன்றம் உடனடியாக நடவடிக்கைகளை முன்னெடுக்கும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.
அந்த இடத்தில் உள்ள குழாய்கள் விரைவாகச் சரிசெய்யப்படுவதை உறுதிசெய்ய இந்த நடவடிக்கைகள் அவசியமாகின்றது என்று பிரதமர்துறை அமைச்சர் (கூட்டரசுப் பிரதேசம்) டாக்டர் ஸலிஹா முஸ்தாபா தெரிவித்தார்.
இங்குள்ள இண்டாவாட்டர் குழாய் சரிசெய்யப்படுவது அவசியம். இன்னும் 3 வாரங்களுள் இந்த விவகாரத்திற்குத் தீர்வு காணப்படும் என நாங்கள் கணித்துள்ளோம். அதேசமயம் சுற்று வட்டார மக்களின் பாதுகாப்பும் அவசியமாகின்றது.எதிர்பாராத அசம்பாவிதங்கள் நிகழாமல் இருக்க அவர்கள் பாதுகாப்பைக் கடைப் பிடிக்க வேண்டும். அது மட்டுமன்றி குழிகள் ஏற்படும் அபாயம் உள்ள பகுதிகளை அடையாளம் காணவும் கோலாலம் பூர் டத்தோ பண்டார் சுற்று வட்டாரப் பகுதிகள் முழுவதிலும் ஆய்வு மேற்கொள் வார். ஆனால் கோலாலம்பூர் முழுவதும் மேற்கொள்ளப்படும் இந்த ஆய்வு முடிவுகளைப் பெறுவதற்கு கால அவகாசம் தேவை. இருப்பினும் உடனடியாக இந்நடவடிக்கைகளை முன்னெடுப்போம் என்று அவர் குறிப்பிட்டார்.